# பொழிவு

ந. அன்னான்



# பொழிவு

## நாவண்ணன்

ஸ்ரீனா வெளியீடு

முதற்பதிப்பு: மார்ச்சு 1994

ஆசிரியர்: நாவண்ணன்

ஸ்ரீனா வெளியீடு 3

விலை ரூபா 40/-

காணிக்கை

எழில் பொழிந்த என்மகளே !
விழி பொழிந்த நீர்கலந்து - இக்
கவி பொழிந்த என்தமிழை - உனக்கு
காணிக்கை பொழிகின்றேன்

ஸ்ரீனா அச்சகம்
215, 2ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்

# அணிப்பொழிவு

ஆரவாரமும் ஆடம்பரமும் இல்லாத கட்டுக் கோப்பாகத் திகழும் எந்த அழகும் "கவிதை" என்று சொல்லப்படலாம் அந்த வகையில் உணர்ச்சிப் பிரவாகத்தில் சிந்தனைச் சிதறல்களுடனான சொல்லோட்டம் எழுத்துலகக் கவிதையாக மிளிர்கின்றது. ஆந்தோட்டமாக விளங்கும் எழுத்துலகப் வடிவங்களை விட அருவி நடையாக விளங்கும் கவிதையின் அழகு ஆர்வலர்கள் மனத்தை எளிதில் கவர்வதில் அதிசயமேயில்லை.

இந்த பொழிவு எனும் அருவியின் ஊற்று கவிஞர் நாவண்ணன். கவிஞனென்பவன் காலத்தின் கண்ணாடியாகவும் விளங்கவேண்டும் என்பதை உருவகித்து நிற்பவர். கருத்தாழமும் சொல்லாட்சியும் நிறைந்தவர். புதுமையென்பதை வடிவமைப்போடு மட்டும் நிறுத்திக் கொள்பவர்களிடையே கருப்பொருளிலும் சொற் சேர்க்கையிலும் புதுமை செய்பவர். இந்த அருவிப்பாய்ச்சல் அந்த ஊற்றின் ஆழத்தை அறிவித்து நிற்கின்றது.

இந்தத்தொகுப்பு ஐந்து. கவியரங்கக் கவிதைகளையும் தன் மகளுக்கான ஒரு கண்ணீர்க் கவிதையையும் உள்ளடக்கியுள்ளது. தனிநாயகம் அடிகளைப் பற்றிய கவிதையில் அவரைப் பேணத் தவறிய சமுகத்தின் பிழையை எதிரொலிக்கும் ஒரு சமுதாயப் போக்கில் பாடும் கவிஞர், நெஞ்சிலேந்தி நிற்கும் நெருப்பு நிலை கொண்ட இடத்தைக் கூறுங்கால்,

தேவாலயங்களை விட தெய்வீகம் பொருந்திய
அறிவாலயம் அன்றோ அக்கினியில் குளித்தது

என்று மொத்த தமிழினத்தின் அவலத்தைக் குத்தகைக்கு எடுத்து ஒரு கவிக்குரலைக் கடந்த தமிழ்க்குரலாக ஒலிக்கின்றார். அந்தரங்கமாய் தமிழில் 'விளை' யாடி அத்லை மகளைக் கவாந்து சித்தத் :தை' களிப்புற வைக்கின்றார். கவிஞர். தூதுக் கவிதையை குறியீடு படிமம் போன்றவற்றை உள்வாங்கிப் படைத்திருப்பது

அவரது ஆற்றலையும் அவாவையும் கூறி நிற்கின்றது, கவிதையிலே தேம்புவது பற்றி அறிந்துள்ளேன், ஆனால் கவிதையே தேம்புவது அவரது கடைசிக் கவிதையிலேதான், பாரதி கண்ணம்மாவிற்குப் பாடாது விட்ட ஒரேயொரு படிமம். அந்தக் குறையும் தமிழிற்குத் தீர்ந்தது.

ஒரு கவிஞன் நாம் காணாதவற்றையும் 'நம்மாற் காணமுடியாதவற்றையும் தான் கண்டு நமக்குக் காட்டும் ஆற்றல் கொண்டவன்.

கவிஞனின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க அவனின் இக் காட்டுந் திறன் அதிகரித்துச் செல்லும்.

காண முடியாதவற்றின் எல்லையாகிய கடவுளையே கம்பன் தன் காட்டும் திறனால் குறிகளாற் காட்டியமை கண்டு பாரதி வியப்பான், இதனாலேயே கம்பன் கவிச்சக்கரவர்த்தியானான்

இன்றைய பல கவிஞர்கள் இக் காட்டுந் திறனை புலனறிவு செல்லுமளவில் முடித்துக் கொள்கின்றனர். தம் ஆற்றலின்மையால் அகம் காணுந்திறனின்றி அவர்கள் செய்யும் கவிதை வெறும் செய்திகளாய் விரிகின்றது.

முழுமை பெறாவிட்டாலும் அகங் காணும் முயற்சியில் முனைந்து நிற்பவர் கவிஞர் நாவண்ணன் அவர்கள்.

கவிதையின் முக்கிய அம்சங்களில் ஒன்றான கற்பனை கவிஞர் நாவண்ணனிடம் நிறைய உண்டு, இதனால் இவர் கவியரங்கங்களை உயிர்ப்பூட்டுதல் கண்டு இரசித்திருக்கிறேன்.

கவியுலகில் அவர் பயணம் தொடர்ந்து சிறப்புற என் அப்பன் கம்பனை வேண்டிப் பணிகின்றேன்.

இ. ஜெயராஜ்
அகில இலங்கைக் கம்பன் கழகம்

# முகப்பொழிவு

என்னுடையவை கவிதைகளா? நான் கவிஞனா? இப்படிப் பிறர் என்னைக் கேட்பதுண்டு. ஏன், என்னை நானே கேட்டுக் கொள்வதுமுண்டு. கவிஞன்தான் நான் என்று முத்திரை குத்திக்கொள்ளும் துணிவும் எனக்கில்லை.

''கவியரங்கம் என்பது செவியரங்கம்'' என்ப திற்கிணங்க கவிதை ஆர்வலர்கள் அல்லாதோரும் புரிந்து கொள்ளக்கூடிய தாக இலகு தமிழில், ஒருவித நாடக பாணியில் கவியரங்குகளில் என்னால் படிக்கப்படும் இவை சுவைப்போரால்வரவேற்கப்பட்டுள்ளன. அந்தச் பாராட்டுகளையே எனது சான்றிதழ்களாக ஏற்று இவற்றை நூலுருவில் கொணரத் துணிகின்றேன்.

அரங்குகளில் என்னால் படிக்கும்போது 'கவிதைகள்' என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட இவை நூல்வடிவில் வரும்போது எந்தளவுக்கு வெற்றி தருமோ? அது கவிதை ஆர்வலர்களின் ஆதரவைப் பொறுத்தது.

இதில் உள்ள ஆறுதலைப்புகளின் முன்னையவை ஐந்தும் என் அரங்கப் பொழிவுகள், இறுதியாகவுள்ளது: என் நெஞ்சில் தவழ்ந்து, பிஞ்சில் உதிர்ந்து, இன்று என் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் என் மகள் ஜெனி (ஷிலாந்தி)க்காக அகத்தில் பொழிந்தவை;

இவற்றின் தொகுப்பே 'பொழிவு' எனும் தலைப்பில் உங்கள் கைகளில் —
இதில் உள்ள ஐந்து அரங்கக் கவிதைகளிலும் ''தமிழுக்குத் தூதாக விளக்கியவர்'' தவிர ஏனைய கவியரங்குகளில் நான் கலந்துகொள்ளக் காரணமானவரும்— சபையின் முன்வரிசையில் இருந்து சுவைத்து உற்சாகம் ஊட்டிவருபவருமான எனது மதிப்புக்குரிய நண்பர், அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாருதி

இ, ஜெயராஜ் அவர்களே இத்தொகுப்புக்கு அணிப்பொழிவு எழுத மிகப்பொருத்தமானவர் என்று அதற்காக அவரை அணுகியபோது மறுக்காமல் அவரது சொற்பொழிவுப் பணிகளுக்கிடையில் என் பொழிவுக்கு அணிப்பொழிவு வழங்கினார். அவருக்கு எனது இதய நன்றிகள்.

இந்நூல் வெளிவருவதில் எனக்கு உற்சாகமூட்டியவர்களான எனது நண்பர்கள் மற்றும் நூலுக்கு வேண்டிய புகைப் படங்களை எடுக்க உதவிய திரு கலைஞானி அவர்கள் நண்பன் பௌஸ்ரின், இந்நூலுக்கு வேண்டிய மூலப் பொருட்களைப் பெற்றுத் தந்துதவிய போஸ்கோ நிறுவனத்தின் உரிமையாளர் எம். எஸ், சந்திரபோஸ் அவர்கட்கும்,

எனக்கு உறுதுணையாகவும் அச்சகத்தின் விழுதுகளாகவும் விளங்கும் ஸ்ரீனா அச்சகத்தில் பணிபுரியும் என்றும் என் அன்புக்குரிய சகோதரர்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

அரங்கத்தில் எனக்கு ஆதரவு நல்கிய கவிதை ஆர்வலர்கள் எனது பொழிவுக்கு தம் ஆதரவையும் பொழிவர் என்ற நம்பிக்கையில், உங்கள் கையில் ஒப்படைக்கிறேன்.

நன்றி

—நாவண்ணன்

# அரங்கப் பொழிவு



தமிழர் போர்க்களத்தில்
முழக்கமிடும் தானை வீரரில்
நாவண்ணன் தனிப்பேர்வழி!
அவர் சொற்களோ
சுழன்று வீசும் சூறாவளி!
எழுத்தின் செல்வர் இவர் சைத்தமிழ்
படித்தால் -
உணர்ச்சி இலார்க்கும்
திறக்கும் விழி!
எரிதழலோன் நாவண்ணன் தமிழ்
எங்கள் பொன் ஈழத்தில்
எற்றுக ஒளி!

கவிஞர் காசி ஆனந்தன்
மார்ச் 1997

# தமிழுக்குத் தூதாக விளங்கியவர்

ஐம்பத்து ஆறு ஜூன் ஐந்தினிலே - தமிழர்
அணியொன்று நின்றது கொழும்பினிலே
நம்பிக்கை ஒன்றையே ஆயுதமாய் - கொண்டு
நடாத்தினர் அறப்போர் ஒன்றதனை

காலிமுகத்திடற் கடற்கரையில் - இவர்
கத்தியில்லா யுத்தம் செய்து நிற்க
காலிப்படையொன்று சூழ்ந்துவந்து - கொடும்
கல்லடி, பொல்லடி தாக்கம் செய்தார்.

கேலிக்குரியவர் ஆக்கிக் கொண்டும் - தீய
கெட்ட வார்த்தை சொல்லித் திட்டிக் கொண்டும்
கோலிக்குண்டு விளை யாடுதல் போல் - அந்த
குண்டர் உருட்டியே நிந்தை செய்தார்

வேலிக்கு ஓணான்தான் சாட்சி போல - காவல்
வீரப்படைகளும் வீற்றிருந்தார்
சோலி நமக்கெதற் கென்று சொல்லி - வெறும்
சோற்றுப் பிண்டமெனப் பார்த்து நின்றார்.

மேலிருக்க வேதம் சொல்லுகின்ற - பக்தி
மேன்மைமிக்க மறைப் போதகரும்
போலிக் கவுரவம் பார்ப்பவராய் - ஞாளப்
பொந்து வாழ் நண்டெனப் பதுங்கிவிட்டார்.

- ஆனால்

நாளிதில் நாம் விழாக் கொள்ளுகின்ற - தனி
நாயகன் மட்டுமே ஒரு துறவி.
தோளிற் சிலுவையை தாங்கிநின்று - பிறர்
துன்பம் துடைக்கின்ற யேசு போல -

காலிமுகத் திடற் போர்க்களத்தில் - வந்து
கர்த்தரின் சாட்சியாய் வீற்றிருந்தார்
கூலிப்படை போட்ட கூச்சலுள்ளும் - தன்
கும்பிட்ட கைகளால் ஆசிதந்தார்-

இத்தனைக்கும் என்ன காரணமாம் - அவர்
இன்பத் தமிழ்ப் பற்று ஒன்று அன்றோ
வந்தனைக் குரிய எம் மொழியை - வாழ
வைப்பதில் இருந்த தாகமன்றோ ?

சிந்தனை செய்திட வேண்டுகின்றேன் - இந்த
செய்யுளைப் படிக்கும் அன்பர்களை
எந்தனைப் பிள்ளையாய் பெற்ற தமிழ் - புவி
ஏற்றமடைய யான் என்ன செய்தேன்?

இந்த வினாவுக்கு என்னபதில் - என்னால்
இங்கு கொடுத்திடக் கூடுமப்பா?

பன்மொழி வித்தகரான பின்னும் - தமிழ்
பற்றினை விட்டிட வில்லையப்பா
தன்மொழி மறந்து இன்னு மொரு - மொழித்
தாயின் புகழினைப் பாடவில்லை.

இன்மொழி தன்னை இப்பூமியிலே - திக்கு
எட்டும் ஒலித்திடச் சேவை செய்தான்
கண்விழி இரண்டில் ஒன்று என - எம்
கன்னித் தமிழ் தன்னைப் போற்றி நின்றான்.

- தமிழ்
ஆராய்ச்சி மாநாடு கூட்டுதற்கு - முதல்
அத்திபாரக் கல்லாய் ஆனவன் யார்?
பேராய் நடந்தது ஐந்தாவது - தமிழ்
ஆராய்ச்சி மாநாடு மதுரையிலே

வேராய்த் திகழ்ந்த இவரை அவர் - அங்கு
வேறாய்க் கருதியே புறக்கணித்தார்.
ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்பத்தில் - ஒரு
அஞ்சலி செய்திட எண்ணினாரா?

ஊராளும் எம். ஜி. ஆர். புகழினுக்கே -
உண்மையிலே அங்கு விழாவெடுத்தார்

இத்தனைக்கும் அங்கே போக வேண்டாம் - ஏன்
இங்கு நடந்ததே இவ்வறிஞன்
செத்து அடக்கிய தூர்ச்சடங்கு - அங்கு
சென்று குவிந்தவர் எத்தனை பேர்?

பள்ளிக்கூடச்சிறார் இல்லாவிட்டால் - அந்த
பரிகசேட்டைச் சொல்லத் தேவையில்லை.
எள்ளி நகை செய்வோம் எம்மை நாமே - அட
எச்சிலைத்துப்பிடு கண்ணாடியில்.

மேதையை ஈன்ற இவ்விழநாடு - தீரா
மெத்தப் பிழை செய்து விட்டது காண்
பேதமைப் பேட்டிகள் காரணத்தால் - அன்று இப்
பேரறிஞனையே துரத்தி விட்டார்.

வாவென்றழைத்தது மற்றை நாடு - அவை
வாங்கி உயர்ந்தன இவனறிவை
போவென்று போக்கிய எங்கள் நாடு - அரும்
புதையலை ஈய்ந்தது அந்நியர்க்கு.

அட்சயபாத்திரம் தன்னையல்லோ - நாம்
அந்நிய நாட்டிலே வீசி விட்டோம்
நிச்சயம் எங்களுக் கோர் இழப்பாம் - இன்று
நினைந்து அழுகிறோம் என்ன பயன்.

சத்தைப் பிழிந்து விற்றுவிட்டு - வெறும்
சக்கையை எம்மண்ணில் புதைத்து உள்ளோம்
சத்தமாய் புகழின்று பாடுகின்றோம் - இது
சர்வ சாதாரணம் எங்களுக்கு.

எட்டி உதைத்தது இந்தநாடு - இதனால்
எந்த இழப்பும் அவர்க்கு இல்லை
எட்டுத்திக்கும் அவர் சென்றதனால் - தன்னை
ஈன்ற இந் நாட்டுக்குப் புகழ்குவித்தார்.

அகிலமெல்லாம் ஒளி பரப்பிவிட்டு தான்
அணைந்திடும் வேளையில் இந்தத்தீபம்
அன்னை மண்மடிக்கு வந்ததனால் - அவர்
அனுபவித்த துயர் ஆர் அறிவார்?

தமிழுக்குத் தூதாக விளங்கியவர் - இங்கு
தனிமைத் துயரிலே தான் தவித்தார்.
அருமை தெரியா நாம் அருகிருந்தும் - அந்த
அறிவுச் சுடரினைப் புறக்கணித்தோம்.

மாண்ட பின்னர் ஓங்கி மாரடித்து - இந்த
மானிலம் கண்டிட ஒப்புவைக்கும்
பூண்ட குணமதை எங்கள் சாதி - இதை
பூண்டோ டொழிந்திடும் நாளெதுவோ?

★ ★ ★

☐ தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் விழா
☐ சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபம், யாழ்ப்பாணம்
☐ 18.07.1981

# நெஞ்சினில்
# நெருப்பேந்தி
# வாருங்கள்

முத்தமிழ் விழாவினிலே முழங்கு கவிதையென்றார்.
எத்தனை முயன்றும் என்னால் முடியவில்லை -

பஞ்சகாலமிது - மண்ணெய்
பஞ்சகாலமிது -
போத்தலில் பஞ்சுவைத்து
பத்திரிகை சுருள்சுக்கி
கொஞ்சமாய் எண்ணெய்விட்டு
கொழுத்துகின்ற காலமிதில்

பஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் என்று
பாடத்தந்திருப்பில் -
பாடித்தான் இருப்பேன் பயமின்றி
- நானோ இன்று

பாடத் தொடங்கவில்லை - தொடை
ஆடத் தொடங்கிவிட்டேன் -

கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவுக்கு
உன்சொல்லைத்தந்து உயிர்கொடுத்த தமிழணங்கே
என்நடனம் பார்த்திரங்கமாட்டாயா?

நாவன்மை எனக்கு நாக்கு இடறுதடி
பாவண்ணம் செய்வதற்கு பார்த்து இரங்கம்மா
நன்கு செய் வேனென்ற நம்பிக்கை எனக்கில்லை
தாயே தமிழ் மாதா தனயன் எனக்கு அருள்
வாயே எனக்கேட்டேன் -

மின்னலெண அன்னையவள்
என்னருகே வந்தாள்
பொன்னினொளி தண்ணிழலாள்
என்ன மொழி தந்தாள்?

ஏடா, எடடா, எடடா.
பட்டெனப் பாடடா பாட்டடா என்றாள்.
பாடினேன், பாடினேன், எப்படி?

முத்துத்தமிழ், சொத்துத்தமிழ்,
வித்துத்தமிழ் என்றேன்
முக்தித்தமிழ், பக்தித்தமிழ்,
சக்தித்தமிழ் என்றேன்
சத்துத்தமிழ், சந்தத்தமிழ்,
சொந்தத்தமிழ் கொண்டே
கொத்துத்தமிழ், கொங்குத்தமிழ்'
சங்கத்தமிழ் தந்தேன்

அன்னைத்தமிழ், முன்னைத்தமிழ்,
கன்னித் தமிழ் கொண்டே
கன்னற்றமிழ்' மின்னற்றமிழ்
தொன்மைத்தமிழ் தந்தேன்
முல்லைத்தமிழ், கிள்ளைத்தமிழ்,
பிள்ளைத்தமிழ் பெய்தேன்
செல்லத்தமிழ். எல்லை இதற்
கில்லை யெனச் செய்தேன் -

கொஞ்சும்தமிழ், விஞ்சும்தமிழ்,
நெஞ்சே தமிழானேன்
வஞ்சர்தமை துஞ்சச் செயும்
நஞ்சுத்தமிழ்கண்டேன்
அமரத்தமிழ், குமரத்தமிழ்,
மதுரத்தமிழ் ஆன
அமுதத்தமிழ், புதுமைத்தமிழ்,
கவிதைத்தமிழ் தந்தேன்.

- என்னை
ஆண்டு அருள் சுரக்கும் ஆரணங்கே
அன்னை தமிழே -
நெஞ்சினில் நெருப்பேந்தி வருங்கவிதை என்றேன்.
மீண்டும் அவள் சொன்னாள் -

என்னைப் பொன்னை பெண்ணைப்பாடி
என்ன நன்மை கூறடா ? - இந்த
மண்ணை மீட்க தன்னைத்தந்த
மைந்தர் புகழைப் பாடடா

வாழும் நாட்டில் வாழ யுத்தம்
நாளும் நடக்கும் வேளையில் - தன்
வாலைச் சுருட்டி ஓடி ஒழிந்த
கோழை தன்னைச் சாடடா -
என்றாள் - அதனால்

சாடிடும் கவிதைகள் சாற்றிடவந்தேன்
நெஞ்சினில் நெருப்பேந்தி வரச்சொல்லும்
நியாயத்தை கவிதையில் சொல்லுகின்றேன்.

நெஞ்சினில் நெருப்பேந்தி வரச்சொன்னீர் - நாம்
நெஞ்சிலே நெருப்பேந்தா நாளெந்த நாளாகும்?
வஞ்சகர் கொடுமையால் வளர்ந்திடும் தீ நெஞ்சில்
கொஞ்சமாகவா கொளுத்தி எரிக்குது?

சக்கரக் கொடியேந்தி வந்தவனே - உனக்கு நீ
சக்கரவர்த்தி எனும் நினைப்போ.
- அன்றேல் நாமுனக்கு
சர்க்கரைப் பொங்கல் எனும் நினைப்போ
- அதனாற்றான்
சங்கிலி வாகனத்தின்
சக்கரம் தனையேற்றி - எம்மவரை
சக்கையாய், சதைப்பக்கையாய்
சப்பையாய் கூழாக்கி - குருதிச்
சகதிற் குளித்தாய் - மோட்டார்

வண்டியில் வந்தவரை வழிமறித்து - அதிலிருந்த
பெண்டிரை, பிள்ளைகளை பெரியவரை - இரக்கம்
கொண்டிரா நிலையிலே வண்டியோடு - நெருப்பு
கொண்டு கொழுத்திய கூற்றுவனே.

வைத்திய சாலைக்குள் வானரங்கள் போல் பாய்ந்து
பைத்தியச் செயல் புரிந்த பாதகக் கும்பலே!

எத்தனை குழந்தைகளை நீ எரித்தாய்
எத்தனை குமரிகளை நீ சிதைத்தாய்
எத்தனை கிழடுகளை நீ சரித்தாய்
எத்தனை பேர் குங்குமத்தை நீ அழித்தாய்

இத்தனைக்கும் எம்மவர்க்குள் ஒரு
பத்தினிப் பெண்ணின்றிப் போவளோ?
கண்ணகி மட்டுமோ தானா கற்பரசி? - அவள்
கண்ணீர் கனலாகி காட்டுத்தீ ஆகுமென்றால் - எங்கள்
பெண்டிர் விட்ட பெருமூச்செல்லாம்
பெருநெருப்பாய் மாறாது எனும் நினைப்போ? - அது

காலத்தின் கனலாகி, காட்டுத்தீயாகி
நெஞ்சில் நெருப்பாகி, நிச்சயம் நீறாக்கும் - அந்த
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்

யாழ்ப்பாணத்தானுக்கு -
'யாவ், சலோ' படிப்பித்த
கீழ்ப்பாக்கக் கூட்டங்கள்.

— வானவில்

பூமாலை வட்டமிட்டு
பொட்டலங்கள் போட்டு எம்மை
ஏமாற்ற வந்த எத்தர்கள் - அவர்கள்
தாமாகப் போகவில்லை, தம்பிமார்கள்தான்
போமச்சான் போஎன்று போட்டு அனுப்பிவைத்தார்

நேசத் தமிழ் இனமே!
நேசக் கரங்கள் எம் நெஞ்சுகளைச் சுட்டனவே.

\- எங்கள்

தேசம் பட்ட கொடுமைக்கு
ஒரு சான்று திரும்பிப்பார் - எமது

தேவாலயங்களைவிட தெய்வீகம் நிரம்பிய
அறிவாலயம் அன்றோ அக்கினியில் குளித்தது.
பூவாய் பிஞ்சாய் நாம் பொசுங்கியதும் பெரிதில்லை

\- எங்கள்

புத்திக்களஞ்சியத்தை புதராக்கிச் சென்றானே.
புத்தன் நாட்டின் புத்தியில்லாப் பித்தன்.

வெட்ட வெட்டத் தழைக்கின்ற மரங்கள் நாங்கள்
பட்டை தீட்டப்பட்டவைரங்கள் நாங்கள் - நாம்
பட்ட துயர் எல்லாம் எம் பலமாகிப் போச்சு - பக்குவப்
பட்டமன நிலையதனைக் கொடுக்கலாச்சு

★ ★ ★

நேற்றைக்கு நடந்தது ஒரு விடயம் - என்
பாட்டுக்குப் பொருள்தேடி
பட்டணத்தில் அலைந்தேன்
பட்டான் ஒரு காளை என் கண்ணில்
வீதியிலே கண்ட விடலையிடம் கேட்டேன்
நெஞ்சில் நெருப்பேந்த விருப்பமா உனக்கென்று
இஞ்சிதின்ற குரங்குபோல இளித்துவிட்டு
இஞ்சாலும் அங்காலும் பார்த்துவிட்டு சொல்லியது

"அண்ணே கொஞ்சம் பொறுங்கோ.
குறைவிளங்க வேண்டாம்

அஞ்சாறு மாதமாய் என் அடுத்த வீட்டிலுள்ள
அஞ்சுகத்தின் மேலேயோர் இது எனக்கு.

வஞ்சி அவளை என்பக்கம்
வளைப்பதற்கு பெரும்பாடு.
கண்டோசும், கைக்குட்டையும்
காசும் மிகச் செலவு — இப்பதான்
கொஞ்சம் எனைப்பார்த்து
சிரிக்கத் தொடங்கியுள்ளாள் - இப்போஎன்

நெஞ்சிலே அவள்தான் நிறைந்துள்ளாள் - இப்ப
நெஞ்சினிலே நெருப்பேந்தி நான்வந்தால்
நிச்சயமாய் அவள் பொசுங்கிப் போவாள் - என்
குஞ்சுக்காதலை கொழுத்தலாமா எனக்கேட்டான்"

- அது மெய்தான் ஆனால்

பிஞ்சுப்பாலகர் எம் பிள்ளைச் செல்வங்கள்
பச்சைக் கிளிபோன்ற பருவக் குமரிகள்
நெஞ்சக் கனவுகளை நிலத்துள் புதைத்துவிட்டு
பற்றைக் காடுகளில், பதுங்கு குழிகளிலே - நாட்டு
பற்றைப் பற்றியதால் பறறிஎரிகையிலே

நானும் என் சனமும் என
காமும் தம்பாடாய் தப்பிக்கும் மனப்போக்கு
வேணும்தானா? விடைகூறும் பார்ப்போம் -

மானம் உயிர் என்போம்,
மறவர் குடியென்போம் - அனைத்தும்
கானம் செய்துவிட்டு
தப்பிக்கப் பார்க்கிறோம் -

எங்கள் தமிழ்ச்சாதி இருக்கின்ற நாள்வரையில்
இந்தமண் நிலைக்கத்தான் போகிறது.

இந்தமண் எமக்குறிவு தந்தமண் - சிங்களவன்
செருப்பாக வாழ்ந்த எங்கள்
சிந்தனைச் சிறையுடைத்து - நெஞ்சில்
நெருப்பேந்த வைத்த புனித மண் - இற்றைக்கு
இருபது ஆண்டுகள்முன், இதே இடத்தில்

தமிழுக்கு விழாவெடுத்த தமிழர்மீது
தாக்குதல் நடாத்தி ஒன்பது பேருயிரை
நீக்குதல் செய்திட்ட நிகழ்ச்சியினால்
துப்பாக்கி ஏந்தி துரோகிகளை ஒழிக்க -
- எம் இளைஞர்களை
தூண்டிவிட்ட மண் இந்தமண் -

சிங்க மறவன் சிவகுமாரன் போன்றவரை
தங்கள் நெஞ்சுகளில் நெருப்பேந்த வைத்தமண்.
அன்று மூண்ட தீ இன்னும் அணையவில்லை.
நின்று எரிகிறது நிற்காது தொடர்ந்தெரியும்
- அதோபாரும்
எரிந்து உருக்குலைந்த நூலகத்தை - அதில்
தீவைக்க பேய்க்கூட்டம் வைத்ததீ - இந்த
தீந்தமிழர் நெஞ்சினிலே மொய்த்ததீ - அதனாலும் எம்
நெஞ்சுகளில் நெருப்பேந்த வைத்தமண் இந்தமண்.
- இதோ
யாழ்நகரை பாழாக்க பாளி அமைத்து
தன்னைச் சுற்றிக்கல் வேலி அமைத்து
கூலிப்பட்டாளம் குடியிருந்த கோட்டை - எதிரி
இதிலிருந்துவிட்டான் குரங்குச் சேட்டை - எமக்கு
விளைவித்தான் எத்தனையோ கேட்டை - இதனால்
பாரும் அது பட்டுள்ள பாட்டை - எம்மிளைஞர்
உடைத்தனர் இம்மதிலின் பூட்டை - எனவே
சிங்களவன் கட்டினான் தன் மூட்டை - அவர்
விட்டகன்றார் சிலர் எலும்புக் கூட்டை - போரில்
வென்றுபுலி காக்கிறது நாட்டை.

வெடியாலும் அடியாலும் முடியாத நிலையிலொரு
படியாக வெளியேற் பிடிநாயை என்பதுபோல்
கடிதாக அவன் ஓட கோட்டையிலே பார் புலிகள்கொடி
இந்த வரலாற்றை எம்மினமே படி
எங்கள் நெஞ்சுகளில் நெருப்பேந்த
இந்த நிகழ்வுகளே போதாதா?

அதனாற்றான் உமக்கிந்த அறைகூவல்
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்.
பாரதியும் பாடினான் சிலவரிகள்
''அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்'' - என்று

காடொன்று எரிந்திட
கனற் குஞ்சு போதும் - எம்
நாடின்று மீண்டிட
நமக்கதுவே வேண்டும் - எனவே

அஞ்சிடல் இனி எமக்கு வேண்டாம்.
மிஞ்சிடில் உயிர் ஒன்றே போகும்
துஞ்சிடல் யாவர்க்கும் உண்டு.
எஞ்சி எம் ஈழத்தில் வாழும்
பிஞ்சுகள் சுதந்திரம் காண
நெஞ்சினில் நெருப்பேந்தி வாரும்

★ ★ ★

- முத்தமிழ் விழா
- கோட்டை மைதானம் மாவீரர் அரங்கம்

1991 - 07 - 08

தந்திரத்தால் கம்பனிலே
தனி எழுத்தில் தலைப்பெடுத்து

# அந்தரங்கம்
## சொல்வேன்
## அதில் "ஊள"

அந்தரங்கம் சொல்வதற்கு
எந்தனுக்கும் ஆசையுண்டு.
- எந்தனது

அந்தரங்கம் கேட்பதற்கு - இங்கு
வந்தவர்க்கும் ஆசையுண்டு - ஒரு சிக்கல்

இந்தரங்கை சுவைப்பதற்கு - நான்பெற்ற
சுந்தரங்கள் வந்துளவே – இனியும்
இந்தரங்கில் எந்தனது
அந்தரங்கம் சொல்வதற்கு - சு
தந்திரமா உண்டெனக்கு?

- அதையும் மீறி உள்ள

அந்தரங்கம் சொல்லிவிட்டு
வீட்டினுக்குச் செல்லாமல்
எந்தரங்கில் சென்றுறங்க?
இந்தரங்கா? எனவேதான்.
தந்திரத்தால் கம்பனிலே
தனி எழுத்தில் தலைப்பெடுத்து
அந்தரங்கம் சொல்லவந்தேன்

- அதில் 'ஊள'

கம்பன் கவிதைப்பாளை கள்வடிக்கும்
எந்தன் கவிதைப்பா "ளை'' கள்வடிக்கும்.

தமிழ்ப் பாளை கள் வடிக்க - நீ
எந்தன் பா ளைகள் குடிக்க
நும்மனங்கள் துடிக்கும்
உணர்வுகள் வெடிக்கும்
அரங்கம் சூடு பிடிக்கும்.

'ளை' என்றன் எழுத்து - கொம்பு
'ளை' என்றன் எழுத்து - இங்கு
எட்டுப்பேர் காவி வந்த
எட்டு எழுத்துக்கும் - என் எழுத்தை
தொட்டுப் பார்ப்பதற்கும் தகுதியுண்டா?

- ஏனென்றால்

காலத்துக் கொப்ப
சீர்திருத்தமில்லாத சின்ன எழுத்துக்கள்!
கொக்கு என நிமிர்ந்து நின்ற கொம்புக 'ளை'
குட்டிபோட்டு சங்கிலிக் கொம்புதனை
கொம்புகள் இரண்டுடைய 'ளை' ஆச்சு.

- இது என்

'ளை'க்குள்ள தனிச் சிறப்பு - என்கவி
தைக்குள்ள தனிச்சிறப்பு.

வாயை வீசியல்ல வாளைவீசியே - பல
வாகை கொண்டவன் தமிழன்.

- இடையினிலே சிலகாலம்
'கா கா' என்று கரைந்தான்.

காலம் தான் வீணாச்சு - பல
காரியங்கள் காலமாச்சு - இறுதியில்
கா, கா. சத்தம் அடங்க - எம்மை
காக்காத அச்சத்தம் அடங்க - எம்மை
காக்காத அச்சத்தத்தை அடக்க

'ளை' எழுந்தான் - கா
'ளை' எழுந்தான் தெம்புடனே,

- தமிழ்கா

'ளை' எழுந்தான் வீம்புடனே
- அதனாற்றான் நாம் இன்று விழாக்க
'ளை' எடுக்கிறோம் தெம்புடனே.

★ ★ ★

திங்களை நிகர் பெண்களை - அவர்
கண்களை அங்கங்களை - வைத்து
பாக்களைப் பாடும் நாக்களை - மற்றை
ஆட்களை இங்கு கேட்கிறேன்.

- எந்தன் ''ளை'

க 'ளை' க்குமா? - இல்லை
இ 'ளை' க்குமா? - அன்றேல்
ச 'ளை' க்குமா?

- கேளும்

திங்களெனப் பெண் பிறந்தது
தேன் குழைத்துச் செய்த சிலை
அங்க வொளி பெற்று அவன்
ஆளெனவே தான் வளர
ஆங்கவளும் வேண்டுவதும் 'ளை'

- அது காளை

அண்ணல் தனைக் பின்னர் கண்டு
அணங்கவளும் மையல் கொண்டு
கண்ணுடனே கண் கலந்து
கண்ணுறக்கம் தான் மறந்து
பெண்ணவளும் வேண்டுவதும் 'ளை.

- அவன் தோளை

ஆணழகன் தோள்படர
அஞ்சுகத்தாள் ஏங்கிமனம்
வீண்பொழுது போகுதென்று
விம்மலுற்றுக் கண்சொரிந்து
வேண்டி வேண்டி நிற்பதொரு ''ளை'
- மணவேளை

மங்கல ஞாண் கொண்டபின்னர்
மங்கையவள் தன் தலைவன்
மார்பினிலே மாலையாக
தொங்கியுளத் தேக்கங்களை
பொங்குகையி லேயவளோர் 'ளை'
- அவள் கிள்ளை

சொந்தமென்று ஆனபின்னர்
அந்தரங்க வேளையிலே
அந்தரங்கம் யாவும் விட்டு
அள்ளி இன்ப விருந்துண்ட
அன்பின் விளைவாக ஒரு 'ளை'
- அது பிள்ளை.

பேசுகின்ற தெய்வமது
பிள்ளையென வீட்டினிலே
ஆசைமுத்தம் தந்து அப்பா
அம்மா என்று கூப்பிடுங்கால்
பாசம் மிஞ்சி நெஞ்சமெல்லாம் 'ளை'
- ஆம் வெள்ளை

பிஞ்சுதனை நோகவைத்து
பெற்றகடன் தான்மறந்து
வஞ்சகத்தால் அக் குருத்தின்
வாழ்வதனைப் பாழடிக்கும்
நெஞ்சர்களுக் கில்லை ஒரு 'ளை'
- அது மூளை

முன்னர் எங்கள் சந்ததியின்
மூத்தவர்கள் மூளை கெட்டு

தன்னை மட்டும் தான் வளர்த்து
தன்னினத்தை விற்றதனால்
தாய்மொழிக்கு வந்த தொரு 'ளை'
- அது தளை

பின்னர் வந்த சந்ததிகள்
பேயரல்ல மூடரல்ல
என்ன விலைதான் கொடுத்தும்
மண்ணை விடு விப்பமென
திண்ணமுடன் காத்திருக்கும்நா 'ளை'
-அது நாளை, ஆமாம்

நம்புங்கள் தமிழீழம் நாளைபிறக்கும்
- அந்த
நம்பிக்கையை நானுரைக்க
கம்பன்விழா மேடையிலே
தம்பி, ஜெயராஜ் எனக்கு
தந்த 'ளை' தலைப்பினிலே
தந்தேன்கவி தட்டும் உங்கள் 'ளை'
- கைகளை

கொட்டும் கர ஓசையோடு
விட்டுவிடில் என்னை நன்றி
கெட்டவன் நீ என்பீரன்றோ
இட்டமுடன் இவ்வரங்கில்
இயம்புகிறேன் எல்லோருக்கும் 'ளை'
- நன்றிகளை.

('நாளை வாழ்வு மலரும்'
என்ற வசனத்தின் எழுத்துகளை சிர்குலைத்து
'நா, வா, வு, ல, ம, ரு, ம், ழ்' என்ற வரிசையில்
ஒவ்வொரு எழுத்துக்களையும் தலைப்பாகக் கொண்டு
கவிஞர்களால் கவிதைகள் படிக்கப்பட்டன - கவியரங்க
இறுதியில் எழுத்துக்களை சீராக்கி 'நாளை வாழ்வு
மலரும் எனும் தலைப்பின் கவிஞர்கள் பாடினர்)

சுத்தமான பொன்னும் தீயில்
சுடுபடத்தான் சுடரும்
நித்தமான எம் துயர்கள்
நிச்சயமாய் விலகும்
வித்து மண்ணில் வீழ்ந்தழிந்தே
விறுகொண்டு வளரும்
நர்த்தனங்கள் ஆடிடுவோம்
நாளை வாழ்வு மலரும்

பொய்த்த இருள் போயொழியும்
பொழுது நாளைபுலரும்
வைத்த குறி தப்பிடாது
வந்த பகை அகலும்
சுற்றியுள்ள தளைகள் அறும்
சுதந்திரமே மலரும்
வெற்றி வெற்றி எனமுழங்கு
நாளை வாழ்வு மலரும்

★ ★ ★

- கம்பன் விழா
- நல்லை ஆதீன மண்டபம்
- 1992-02-15

# அத்தை மகள் வந்தெமது ஆவி கவர்வாளோ

அத்தை மகள் வந்தெமது
ஆவி கவர் வாளோ?
இத்தைத் தினத்துக்கு
ஏற்றதொரு தலைப்பு -

தைமகள் வந்த தினம்
இந்தத்தை - வந்ததை
சந்தத்தை கொண்டு
கவிதை செய்து

அத்தை மகள் என்றும்
அத் தைமகள் என்றுமிரு
பதத் தை அனுபவிக்க - வந்த
அனை வருக்கும் வணக்கம்.

அரைக் கிழவன் ஆகிவிட்ட நிலமையிலே
அத்தை மகள் வந்தெனது ஆவிகவர் வாளோஎன்று
கவிதை பாடப்போய் - இன்று
காலையில் நான் பட்டபாடு

உண்மையைச் சொல்லுகிறேன்
கொஞ்ச நாளாக - என்
மனைவிக்கும் எனக்கும்
மனசு சரியில்லை

பாசெடுத்து ஒருவழியால் - கொழும்புக்கு
பயணம் அனுப்பிவிட்டு - என்னை
ஆசுவாசப் படுத்தி
அமர்ந்திருந்த வேளையிற்றான்
கவியரங்கில் கலந்து கொள்ள
கட்டளை வந்தது - என்

அகத்தாளும் எனக்கு ஒரு
அத்தை மகளன்றோ! - அவள்
அருகினிலே இன்றில்லை
- ஆகையினால் அந்த

அத்தை மகள் வந்தெனது
ஆவிகவர் வாளோ என
ஆக்கி வர முயன்றேன் - கவி
அரங்கக் கவிதையினை
- ஆனால் இன்றுபோல்

முத்திய பெண்ணாயல்ல
முதிராத இளையவளாய் - இந்த
அத்தை மகள் பற்றிய
அந்த நாள் நினைவுகளை
சிந்தாக்கி இவ்வரங்கில்
சிந்திட விரும்புகின்றேன்.

அத்தனையும் உண்மையல்ல
அதிகமிவை கற்பனையே - இன்று அதி
காலை மூன்று மணி
கவி எழுதக் குந்திவிட்டேன்

கடதாசித் திரியிட்ட
'ஜாம்' போத்தல் விளக்கு
மண்ணெண்ணெய் விலையேற்றி
- எம் கற்பனைக்கே

மண்போடும் எம் நாட்டு
மண்ணெண்ணெய் காரர்களை
மனதாரச் சபித்தபடி
மன விசையைத் தட்டிவிட்டேன்

பக்கத்தே இல்லா என்
பத்தினியை நினைக்க
பல வயது குறைந்து
பருவத்தில் இளமையுற்றேன்

பாட்டெழுதத் தொடங்கி
எட்டின் மேல் ஓட்டினேன் பேனாவை

ஆண்டுகள் பலதின் முன் நான்
வேண்டித் தவமிருந்தத
அத்தைமகள் வந்த கதை
அனுபவத்தை நினைக்கின்றேன்.

அத்தை மகள் வரும் செய்தியை - என்
அம்மாதான் சொன்னார்கள் -
அத்தை மகள் வருவதென்றால்
ஆருக்குத்தான் மகிழ்வில்லை? என்
சித்தமெல்லாம் கிளுகிளுப்பு.

அத்தைமகள் அவளெனது
ஆத்மாவின் கீதமன்றோ? - அவளை
பெற்றவீட்டினிலே எனக்கென்று
பேசிமுடிந்த பொருள் - என்
சித்தமெல்லாம் இனிக்கும்
சித்திரப் பெண்பாவை - அந்த
அத்தை மகள் வருவதென்றால் - என்
ஆவி துடிக்காதா?

அத் தைத் திங்களதில்
அமைந்து வரும் சுபதினத்தில்
அத்தை மகள் என் சொத்தாய்
ஆக்கிவைக்கும் திருமணமாம் - இதை
அம்மாதான் சொன்னார்கள் - பின்
சும்மாவா மனமிருக்கும் - சொல்லுங்கள்

அத்தை மகள் வந்தெனது ஆவிசுவர் வ..ளோனவ
எத்தனை தூரம் அது எங்கிப் பறந்திருக்கும்?
- அவளும் நானும்

சின்ன வயதினிலே
சிற்றில் அமைத்ததினை
வண்ணத்துப் பூச்சிகளாய்
வட்டமிட்டு வந்ததினை
மண் அப்பம் சுட்டு
மரந்தாவி ஆடியது - இப்படி
எண்ணத்தே காட்சிகள்
எத்தனையோ தோன்றியது
- கள்ளமில்லா பருவமது

அப்பொழுதே எங்களுக்குள்
அம்மா அப்பா விளையாட்டு
அப்பா நான், அவள் அம்மா
பரட்டைத் தலையும்
பளபளத்த விழியும்
சிரட்டையில் மண்சோறும்
செவ்வரத்தை இலைக் கறியும்
சேர்ந்தொன்றாய் ஆக்கி
அப்பாவை காத்திருப்பாள்
அப்பாவைக் காத்திருப்பாள்
- ஒரு நாள்
அப்பாவாய் தான் வந்தேன் - நல்ல

'சுப்பா'வாய் தான் வந்தேன்
ஒப்போடு முகம் மலர்ந்து - அவள்
உணவு பரி மாறுகின்றாள்

சுப்பாவில் இருந்த நானோ - 'அடி
உப்பில்லை உணவுக்கு' என்று
உதைக்கின்றேன், உதைத்த உதை - அவள்
உதட்டினிலே விழ, உதடுடைந்து இரத்தம் வர
ஒப்பாரிவைத்து ஓங்கி அழுகின்றாள்

அடுக்களையில் இருந்த என்
அம்மா ஓடி வந்து
துடித்துப் பதைத்தவளாய்
துடைத்துவிட்டு அவள்வாயை - என்
காதைப் பிடித்திழுத்து
'கழுதை' என வாழ்த்தி
மொத்து மொத்தென்று
முதுகினிலே மொத்தி
முற்றத்து வெயிலிலே
முழந்தாளில் இருத்திவைத்தாள்

அத்தை மகள் கத்தலெல்லாம்
அத்தோடு நின்று போச்சு
அத்தை மகள் அவள்மீது
ஆத்திரம் எந்தனுக்கு
சத்தமிட்டு இந்தச்
சனியன் கத்தித்தான்
சாத்தல் கிடைத்தது
எனக்கென்ற கொதிப்பு

செத்தாலும் அவளோடு சேருவது இல்லையென்று
செய்து கொண்டேன் என் உள்ளே சபதம்

முற்றத்தில் வெய்யிலில்
முழந்தாழில் நின்று கொண்டு
'மொட்டைச்சி; முளிச்சி, பொட்டைச்சி பேச்சி'
என்று திட்டிக் கொண்டிருந்தேன் மனதில்.

அத்தையவள் தற்செயலாய்
அப்பக்கம் வந்தாள் - எந்தன்
அவல நிலை கண்டு
மெத்தவும் தானிரங்கி
முத்தத்தால் எழுப்பி முந்தானையால் துடைத்து
முத்தம் ஒன்று கொடுத்தாள்
அம்மாவை ஏசி என்னை அரவணைக்க போது
ஆத்திரம் எல்லாம் அழுகையாய் வெடித்தது
- அவளோடுமெட்டுமினி

பேசுவது இல்லையென்று
பிடிவாத மாயிருந்தேன் - அவள்
பார்வையிலே படும்படியாய் நடப்பேன்
அவள் பார்ப்பாள் - நான் முறைப்பேன்
அவள் சிரிப்பாள் - நான் சினப்பேன் - அந்த
சித்திரமை விழிகள் கலங்கும் - விஸ்வா
மித்திரன் பாணியில் நான் இருப்பேன்
- இந்தப் போராட்டம் மாலைவரை நீண்டது.

மாலையிலே வந்து மாமா அவளிடம்
மாம்பழம் ஒன்றைக் கொடுத்தார்
பார்த்தும் பார்க்காதேன்
பாவனையில் நானிருந்தேன்

கனியோடு வந்து - என்னிடம்
கனிவோடு நீட்டினாள் - பாவமவள்
பழத்தைக் கண்டதும் பகைமை குறைந்தது.
பாதியைக் கடித்துவிட்டு மீதியை தா' என்றாள் - என்

வாயூறி ஒழுகியது, வாங்காது விடுவேனா?
ஏக்கம் நீங்கிடவே, எழிலாகச் சிரித்தாள்

ஏவாளின் கனியேற்று ஏமாந்த ஆதாம்போல்
அத்தைமகள் கனிஏற்று அத்தனையும் நானிழந்தேன்.
ஆதாமின் வழிவந்த ஆண்தானே நானும்!

நாட்கள் நகர்ந்தன நாசமாய் ஒரு செய்தி
மாமாவுக்கு மாற்றமாம் - அயல்நாடு போறாராம்
கடல்தாண்டிப் போகுமவர் திரும்பிவர
கனகாலம் ஆகுமாம்
அத்தைமகள் போறாளாம் அழக்கூட முடியவில்லை
எத்தனை துயரங்கள், ஏக்கங்கள் என்னுள்ளே!
- போய்விட்டாள் ஒருநாள்.

முத்தான நினைவலைகள்
முன்தோன்றி எனைஉதைக்க
கத்தவும் முடியாமல்
கண்கலங்கி நின்றேன் நான்
சத்தமிட்டு நாங்கள் சண்டைபிடித்த செயல்
பற்றை மறைவிலே பதுங்கித்திரிந்த செயல்
ஒத்தபடி களவெடுத்து ஒழித்துத் தின்றவைகள்
ஒன்றா இரண்டா ஓயவில்லை என் நெஞ்சு

நாட்கள் பல சென்றும் நானோ மறக்கவில்லை
ஆண்டுகள் பல சென்றும் -
என் ஆவிக்குள் அவளிருந்தாள்.
ஆண்டுகள் பலதின்பின் அத்தைத்திங்களிலே - அந்த
அத்தைமகள் வருகிறாளாம் -

சித்தமெல்லாம் இனித்தது, நித்திரையும் வரவில்லை
நிழற் படம்போல நீண்ட பழம்நினைவுகள்.

அன்னிய நாடிருந்து அப்பசரஸ்போல் அவள்வருவாள்
கண்ணியமாய் நடப்பாள்.
கதைப்பதிலும் கனிவிருக்கும் - என
எண்ணிய நான் என்னுருவை
கண்ணாடி முன்
பார்த்தேன் - என்
கறுப்பு நிறம் எனக்கு
வெறுப்புத் தந்தது.

பல பல தடவைகள்
பவுடர் பூசினேன்
பலகோணப் 'போஸ்'கொடுத்து
பார்த்தேன் சிரித்தேன்.
அத்தை மகள் வந்தெனது
ஆவிகவர் வாளெனவே
எத்தனை கனவுகளை
என்னுள் வளர்த்திருந்தேன்.

அத் தைத் திங்களிலே -
என் அத்தைமகள்
தத்தை யென -
தைய் தைய் என வருவாள்
முத்தை வரிசையாய்
முன்னுதட்டில் உள்ளடுக்கி
பித்தை எனக்கேற்ற
பேசிச் சிரித்திடுவாள்.

அத்தான் உங்கள்மேல்
ஆவி எனக்கென்பாள்
செத்தேன்? சுகமேன்?
சொந்தம் உமக்கென்பாள்
மெத்தை வீட்டினிலும்
மேலத்தோன் உங்களுடன்

செத்தை வீட்டினிலே
சேர்ந்தொன்றாய் வாழ்தலென்பாள்

- கற்பனை முடியவில்லை, அவள்
கைத்தலம் பற்றி
காதல்மனை நடத்திடுவேன்
மெத்தென்ற பாய்விரிப்பில்
மெய்யுறக்கம் நான்கொள்ள

- காலையில்

சத்தமின்றி எழுந்து சமையல் அறை சென்று
கால்மேல் கால்வைத்து காப்பியோடு வருவாள் -
சோடான விழிகள் சுட
சூடான காப்பி என்பாள் - அது
காலைக்காப்பி - அல்ல அல்ல காதல் காப்பி

காப்பியை உறிஞ்சும் என் உதடு - அவள்
கவர்ச்சியை உறிஞ்சும் என் விழிகள் - பின்
சாப்பாடு எதற்கு?

இந்த வரிகளை நான்
எழுதிக் கொண்டிருக்கையிலே - என்
பின்தலையை யாரோ
பிராண்டுவதாய் ஓர் உணர்வு.

அத்தை மகளோ?
திடுக்கிட்டேன் திரும்பினேன் -
அத்தை மகள் அங்கில்லை - நான்
பெத்த மகள் நின்றிருந்தாள் - அவள்
பார்வையில் ஏதோ
பயமுறுத்தல் இருந்தது - பின்னிருந்து

அத்தைமகள் பற்றியான்
அடுக்கிய கற்பனைகள்

அத்தனையும் அவள் ஒழுங்காய்
படித்து விட்டாள் போலும்
அம்மாவை அனுப்பிவிட்டு
அத்தை மகள் கற்பனையா
எம்மாத்திரம் துணிவு
என்பதுபோல் அவள் பார்வை

கவிஞன் எந்தனுக்கு
கற்பனையில் கூட
காதலிக்க உரிமையில்லை
காதல கடிதம் கைதவறிப்போய் மாமி

கையில் அகப்பட்ட நிலைபோல
அசடு வழிய அவளைப் பார்த்திளித்தேன் - இது
காலையிலே நடந்தகதை.

★ ★ ★

காலையிலே நடந்த கதை இருக்கட்டும் - எம்
காலமெல்லாம் நடந்த கதை காண்போம்.

தைப் பொங்கல் தமிழர் விழா
தை தையாய் எத்தனையோ
தை தாண்டி வந்துவிட்டோம்
எத்தையும் நாம் விரும்பும்
அத் தையாய் அமையவில்லை - பதிலாக
எங்கள் நிலத் தை
மொழி வளத் தை
இரத்த் தை
இனசனத் தை - சனப்
பெருக்கத் தை
தேடிய சொத் தை - கல்வித்
தாரதரத் தை
முளை வளத் தை
பொருளா தாரத் தை

ஆக்கத் தை - ஊக்கத் தை நோக்கத் தை - என
அனைத் தையும் இழந்தோம் - இதற்காக
பேச்சு வார்த் தை செய்தோம்
ஒப்பந் தத் தை செய்தோம்
எம் விருப்பத் தை சொன்னோம் - எதிரியோ தன்
அதிகாரத் தை காட்டினான்
ஆபத் தை விளை வித்தான்
சிங்களத் தை திணித்தான் – எம்
கழுத் தை அறுத்தான்.

– இதனாற்றான் எம்மிளைஞர்

ஆயுதத் தை எடுத்தார்
அவன் கொட்டத் தை உடைத்தார்
குடியேற்றத் தை தடுத்தார் - இதனால்
இளைஞர்கள் காத்தனர் இனத் தை
கண்டனன் எதிரிஎம் பலத் தை
சிறிலங்கா இழந்தது தன் வளத் தை
பிணங்களால் நிறைந்தது கனத் தை - இது
கலக்கியது சிங்களவர் மனத் தை - எனவேதான்

அவர்கள் விரும்புகிறார் சமாதானத் தை - நாம்
விரைவினில் பெறுவோம் சுதந்திரத் தை
வெல்லுவோம் எம்தமிழ் ஈழத் தை
அந்தத் தை எந்தத் தை?
அத்தை எத் தை? - விரைவினில்
அத் தை மகள் வந்திடுவாள் - எமது
ஆவி கவர்ந் திடுவாள் – அன்பர்களே
இனியதொரு ஆரம்பம் இத் தை - இது
எமக்குத் தந்திடும் ஆனந்தத் தை - என
இயம்பித் தந்தேன் என் வணக்கத்தை

வணக்கம்

வடமராட்சி கம்பன்கழக பொங்கல் விழா
நடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் அரங்கம்
1993-01-14

வெம்பி விரக்தியுறல்விட்டு
விரைந்துபோய் கம்பனுக்கு
சொல்

# கவிதைத் தூது

## ( வெற்று மின் கம்பம் )

---

வெம்பி விரக்தியுறல் விட்டு விரைந்துபோய்
கம்பனுக்குச் சொல் கவிதைத்தூது - எனும்
தலைப்பிலே என்கவிதை தருவதற்கு முன்னாலே
உண்மை ஒன்றை உங்களுக்கு
உரைத்து விட விரும்புகிறேன்

பெண்டாட்டி எனக்கு இரண்டு - எனக்கோ
மூத்தாளை விட இளையாளில் அன்பதிகம்
- ஏனென்றால்
கதைக்கின்ற போது சற்றுக் கடுமையாய் கதைத்தாலே
முறைக்கின்ற பண்பெந்தன் மூத்தாளுக்குண்டு.
- ஆனால் என் இளையாளோ, நான்
முதுகினிலே ஏறிநின்று உதை உதையென் றுதைத்தாலும்
தாங்கிச் சுமக்கின்ற தர்மபத்தினியவள் - என்
இல்லாளின் சக்களத்தி எவளென்று நினைக்கின்றீர்
- என் சைக்கில்
பெல்இல்லாள், பிறேக் இல்லாள்
பிறீவீலில் பல் இல்லாள், ஒருபக்க பெடல் இல்லாள்
கலகலப்பாய் இரு என்று
கட்டளை நான் அவளுக்கு - அன்றுமுதல்
கல கலப்பாய் தான் இருப்பாள்

மட்காட்டும், செயின் கவரும்
மணிக்குரல் இசை எழுப்பி
சல், சல், சல் என்று சவாரி வண்டி போல் - அதன்
சலங்கை ஒலிகேட்டே சனம் ஒதுங்கி வழிகொடுக்கும்
பாம்பூர்ந்து சென்ற பாதையின் தடம்போல - எந்தன்
பத்தினி இவள் சென்ற சில்லின்தடம் இருக்கும்
அத்தனை ஆட்டம் அவளுடைய சில்லிரண்டும்
எப்போதோ ஒரு நாளில் இருந்திட்டு
கீச்சு கீச்சென்பாள் - அது எண்ணெய் காய்ந்து
போச்சு போச்சென்று புலம்புவதாய் எனக்குரைக்கும்
- சற்றே எண்ணெய் விடில்
பேச்சு மூச்சின்றி பேதையவள் பணிதொடர்வாள் -நான்
இரந்து கொடுத்தாலும் - பிறர்
இரவலாய் அதை வாங்கார்
தெருவிலே விட்டாலும் - சைக்கில்
திருடனும் தொடமாட்டான்.
- இப்படியே இது இருக்க
அன்றோர் நாள் மாலை
கம்பன் கழகத்தில் கதைத்துக்கொண்டிருக்கையிலே.
தம்பி ஜெயசீலன் இங்குள்ள தமிழ்க்கவிஞன்.
வெற்றுமின் கம்பத்தை விரைந்து தூதனுப்பும்.
- தலைப்பை
பெற்றுக் கவி இயற்றும் பெரும்
பொறுப்பை உரைத்திட்டான்
சற்றும் தயங்காது சரியென்று சொல்லிவிட்டு
விடை பெற்றுச் செல்கின்றேன்
வீதியெங்கும் கும் இருட்டு - என்

காதல் வாகனத்தில் - கலகலப்பாய் செல்லுகின்றேன்.
இருட்டில் அது எழுப்பும் இசை இன்பவெள்ளத்தில்
நீந்திச் சுகித்தவனாய் நிம்மதியாய் செல்கின்றேன்

ஆரியகுளத்துக்கு அருகாலே போகையிலே - ஒரு
பாரியவாகனம் பாய்ந்தெதிரே வருகிறது.
கூரிய அதன் ஒளியில் குருடாக என் விழிகள்
நேரிய வழி இழந்தேன் நிறுத்தவும் முடியவில்லை.
காதல் வாகனம் கட்டுக்கடங்காது
குளத்தை நோக்கி கும்மிருட்டில் பாய்ந்தது.

பார்த்தனைக் கூவிய பாஞ்சாலிபோல
கம்பன் விழாவின் கவியரங்கின் நினைவினிலே
'கம்பா' என்று கத்தினேன் வீரிட்டு
கம்பன்கருணை கணப்பொழுதில்
கிடைத்ததுபோல் - மின்
கம்பத்தில் மோதினேன் - என்
காதல் வாகனமும் கதிகலங்கி நின்றது.

ஆரிய குளக் கிடங்கில் அபிஷேகமாகாமல்
சீரிய பணி செய்த செம்மலே - மின்கம்பமே
பாரிய நின்பணியை பாடாமல் விடுவேனேல் - நான்
பாவலனாய் இருந்தும் பயனென்ன? பலனென்ன?

கம்பனிடம் தூதனுப்ப உன்னைவிட எந்தனுக்கு
நம்பகமானவர்கள் நானிலத்தில் யாரோ?
வெற்று மின் கம்பமே!
ஒற்றைக்கால் நிலத்தூண்றி (தூண்)
ஒருகால் தனைத் தூக்கி (விளக்குத்தண்டு)
கற்றைச் சடையை காற்றில் பறக்கவிட்டு (கம்பிகள்)
நர்த்தனமாடுகின்ற நடராசப் பெருமானைபோல்
இற்றைவரை காட்சிதரும் வெற்று மின்கம்பமே
சற்றேகேள் நின்புகழை சாற்றுகிறேன் இவ்வரங்கில்

சாமிகள் உறைந்துள்ள
சந்நிதானங் களில்கூட - உன்போல்
சமத்துவம் பேணுவரோ
சாற்று மின்கம்பமே - ஏனென்றால்

காக்கை வந்தமரும் உன்மீது, கழியும்
கழிவுகளை வைத்துண்ணும் - என்போன்று
பாக்கு வெற்றிலை போடுபவர் உன்மீது
படை படையாய் சுண்ணாம்பை தடவிடுவர் - இன்னும்
மூக்கைச் சீறி உன்முதுகில் துடைத்திடுவர் - இருந்தும்

சற்றேனும் கோபமுறா வெற்று மின்கம்பமே.
வெம்பி விரக்தியுறல் விட்டு விரைந்துபோய்
கம்பனிடம் சொல் கவிதைத்தூது

'எல்' போர்டு போட்டவர்கள்
எத்தனை பேர் உன்னில் மோதி
பல்லுடைந்து வீழ்ந்தாலும்
பகவான்போல் நீ நிற்பாய்

பட்டப் பகலினிலே பகிரங்க வீதிகளில்
ஆத்திரத்தை அடக்கிவிடும் ஆற்றலுள்ள பலபேர்கள்.
காத்திருக்க முடியாது - தம்
காத்திரக் கடமையினை முடிப்பதற்கு
- நினைக் கண்ட

மாத்திரத்தில் நின் உருவை
மறைப்பாகப் பயன்படுத்தி - தம் உடலின்
நீர்த்திரவக் கடுப்பதனை
நின்று கழிக்கையிலே - அவர்
கற்புக்கும் நீயன்றோ
கவசமாய் நின்றிடுவாய் -

உள்ளவரை பெற்றவரை
உச்சியிலே தூக்கிவைத்து
இல்லாதபோது இழிவு செய்தொதுங்குகின்ற - நன்றி
இல்லாத பிள்ளைகளைப் போல நீ அல்லாது
மின்சாரமில்லாத மின்சாரக் கம்பிகளை

உன்தலையில் தாங்கிநிற்கும்
உயர்ந்த குணக் கம்பமே
வெம்பி விரக்தியுறல் விட்டு விரைந்துபோய்
கம்பனிடம் சொல்கவிதைத்தூது

எம்தமிழர் படையதனை
எதிர்த்து மோத வந்து
தம்காலை இழந்து சென்ற
தமிழர் எதிர்ப் படைபோல - ஒருகாலம்
ஈசல் படை உன்மீது
இயன்ற வரை மோதி
இறக்கை ஒடிந்து விழ
இயலாத நிலைமையிலே - உன்
ஒற்றைக் காலடியில்
ஊர்ந்து மடிந்த தெல்லாம்.
உந்தன் புகழுக்கு உரிய தனிச் சிறப்பன்றோ

வீதிக் கரையினிலே வீழ்ந்து கிடக்கையிலே
- சம்மட்டி கொண்டு
மோதி உனைப்பிளந்து உன எலும்புகளாம்
இரும்புக் கம்பிகளை இறாத்தலுக்கு விலைபேசி
விற்றுப் பலபேர் தம் வயிற்றுப்பசி தீர்ப்பர்

இற்று விழுந்தாலும் -
என்பும் உரியவர் பிறர்க்கு என்ற
வள்ளுவன் வாக்குக்கு வாழ்வு தரும் வள்ளலான
வெற்றுமின்கம்பமே விரைந்து சொல் கவிதைத்தூது

உன்பெருமை முழுவதையும்
உணர்ந்துள்ள காரணத்தால்
தெரு நாய்கள் பல உன்னை
தேடி வந்து உன்னடியில்
ஒரு காலைத் தூக்கி
உயர் 'சல்யூட்' அடிப்பதுண்டு

பரம்பரைப் பெருமைகள்
பலவுடைய கம்பமே
பரம்பொருள் நரசிம்மம்
பிறந்தது நின் இனத்திருந்தே

பரமபிதா திருமைந்தன் இயேசுபிரான்
பாவமனு உருவெடுத்து பாரகத்தில்
பாதகர் கட்டிவைத்து
பதைத்திடவே அடிகொடுக்க
கர்த்தரைத் தாங்கி நின்ற
சிறப்புடைத் துன் பரம்பரைக்கே

நல்லதுக்கும் நீயன்றோ - நல்லது
அல்லதுக்கும் நீயன்றோ.

வெற்று மின் கம்பமே
விளக்குணக்கு இன்றில்லை - ஆனால்
விளக்கங்கள் முடிந்த பின்னர் - உயிர்
விளக்குகள் தனை அணைத்து
வெற்றுடல் தொங்கவிட்டு
விளம்பரங்கள் செய்கின்ற
கம்பமே நீயன்றோ
கழுமரமும் இன்றானாய்.

இத்தனை பெருமையுள்ள
வெற்றுமின் கம்பமே
முத்தமிழின் சுவையுணர்ந்த
முதற்புலவன் கம்பனுக்கு
தத்தை விடு தூதல்ல
மேகம் விடு தூதல்ல
உத்தமம் நிறைந்திட்ட
உன்னையே யான் அனுப்புகிறேன்

வெம்பி விரக்தியுறல் விட்டு விரைந்துபோய்
கம்பனிடம் சொல் கவிதைத் தூது -

இன்னல்கள் மத்தியிலும் இழப்புகள் மத்தியிலும்
உன் நல்ல தமிழுக்கு உயர்ந்த விழாவெடுக்கின்ற
- நல்லூர்
கம்பன்விழா மேடையிலே காட்சிதரச் சொல்லு
- ஒருவேளை
பூதவுடல் இல்லான் யான்
புவிவருதல் முடியாது
ஆதலினால் மன்னிக்க
என்று அவன் உரைத்திட்டால் -
காதலுற்ற எம்தூதை
கம்பனவன் மறுத்திட்டால்

நாவண்ணன் நவின்றதாய் சொல்லு -
ராமகாதை பாத்திரங்கள் யாவினுள்ளும்
கம்பனே நீபுகுந்து கதைகதையாய் பேசியுள்ளாய்
உம்பர் உலகத்தில் உறைந்துள்ள உந்தனுக்கு
கூடுவிட்டுக் கூடுபாய்தல் கூடாதகாரியமா?
- அமரர்
நாடுவிட்டுஈழ நாட்டுக்கு வரச்சொல்லு

★ ★ ★

புத்திர சோகத்தை புரிந்தவன் என்கம்பன்
இந்திர ஜித்தவன் இழப்பதனாற் துடித்த
தந்தையை தாயை தன்கவியிற் கண்டவன்

தனயனவன் வனமேக தாங்காத தசரதன்
இணையில் சோகத்தால் இதயம் வெடித்திறந்தான்
எனபதினைத் தன்கவியில் இயற்றியவன் கம்பன் -
- என்! தன்மைந்தன்

அம்பிகாபதியையே அள்ளிக் கொடுத்துவிட்டு
அஞ்சாது கவிபடித்த ஆற்றல்மிக்க கம்பனவன் -
- அவன் போன்று இங்கு

புத்திர சோகத்தால் எத்தனை பேர் துடிக்கின்றோம்
கம்பவிழாக் காணவென்று காத்திருந்த எத்தனைபேர்
பொம்பர் அடிபட்டு பொடிப்பொடியாய் போனார்கள்
கிளாலிக் கடற்பரப்பில் கீழ்மக்கள் வதைசெய்து
வள்ளத்தோடமிழ்த்திய வரலாறு இங்குண்டு.
- இன்னும். சென்றஆண்டு

கம்பவிழா மேடையிலே தெம்புடன் நான் கவிபடிக்க
கும்பலிலே ஒருத்தராய் குலுங்கிச் சிரித்தவர்கள்
இன்றிந்த அரங்கத்தில் இங்கில்லை - அவரை
எண்ணி எங்கள் இதயங்கள் அழுதிடினும்
கம்பனே உன்தமிழில் காதலுற்ற காரணத்தால்

கன்றொன்றைப் பறிகொடுத்த
கறவை ஒன்றின் நிலையினிலே
இன்றிந்த மன்றினிலே
நின்று கவிபடிக்கின்றேன்
என்று அவனிடம் எடுத்தியம்பு
கட்டாயம் அவன் வருவான்

நன்றி வணக்கம்

□ 05-05-1993ல்
□ நல்லூர் கோவில்வீதி
□ கம்பன் விழா

(இக்கவிதையில் பிற்பகுதியில் கூறப்படும் புத்திரசோகம் பற்றிய கவிதைகள் 28-04-1993ல் காலமான மகளை மனதிற் கொண்டு எழுதப்பட்டவை)

# மகளுக்காக
# கவிதைக்
# கண்ணீர்

காய்க்காத பூமகளே
காம் பொடிந்து வீழ்ந்தாயோ?
தீக்காயம் நெஞ்சிலிட்டு
திருநாடு சென்றாயோ?

தேயாத சந்தணமே
திருநாட்டில் கமழ்வதற்கோ
ஓயாத நின் வாய்க்கு
ஓய்வளித்து நீ போனாய்?

தங்கமே நின் பிரிவை
தாங்குமோ எம்மனது
எங்கு போய் ஆறிடுவோம்?
எப்படி நாம் தேறிடுவோம்?

மயாது மகளே எம்
மனத்துயரம் தீராது
நீபோன நீண்டவழி
நாம் தேடிவரும் வரைக்கும்

- 29.03,1993
- இறுதிச் சடங்கின்று எழுதப்பட்டது

# அகப் பொழிவு





கல்லறைக்கு
உள்ளே நீ

கல்லறைக்கு
வெளியே நான்

நலவுறக்கம்
கொள் மகளே

நானிருந்து
பாட்டிசைப்பேன்

வீசுகுளிர் தென்றலென
　　விளங்கி வந்த மகளே!
விதியடித்த காற்றினிலே
　　விழுந்து விட்ட மலரே!
பேசுகிளி யாய் குலவும்
　　பிள்ளை யென வந்தாய்
பேரிடியே தந்து எமை
　　புலம்ப விட்டுச் சென்றாய்

பனிமலரின் குளிர்மையதுன்
　　பார்வையிலே கண்டோம்
பண்ணிசையின் இனிமையதுன்
　　பேச்சினிலே கொண்டோம்
இனியுனது இனியமொழி
　　என்றடியாம் கேட்போம்
இதயமெலாம் நோகுதடி
　　எந்த விதம் ஏற்போம்

கட்டிவைத்த கோட்டை யெலாம்
　　காகிதம் போல் ஆச்சே
கண்ணீரில் கதை யெழுதும்
　　கடமை எனக் காச்சே
எட்டி விடம் இனிக்குமடி
　　உன்னிழப்பை எண்ணில்
கொட்டுதேடி தேள் போலும்
　　கொடியது உன் சாவு

* * *

கீதமாய் ஒலித்த சோலைக்
கோகிலம் பறந்து போச்சு
நாதமாய் ஒலித்த யாழின்
நரம்புகள் அறுந்து போச்சு
சீதள ஒளியைப் பெய்த
சந்திரன் மறைந்து போச்சு

தீதுளம் அறியா உன்னை
திருடியே காலம் போச்சு
பூதளத்துள்ளே உந்தன்
பூவுடல் புதைந்து போச்சு
மாதுனைப் பிரிந்ததாலெம்
மகிழ்ச்சியும் அணைந்து போச்சு

காவிலோர் பூ உதிர்ந்தால்
கவர்ச்சி போய்விடுவதில்லை
பூவிலோர் இதழ் உதிர்ந்தால்
பூமணம் குறைவதில்லை
பூவை நீ மலர்ந்த சோலை
புன்னகை விளைந்த சோலை
நாவண்ணன் காவில் வந்த
நறு மலர்நீ உதிர்ந்தாய்
சாவை நீ அணைத்துப் போனால்
சாந்தி நாம் கொள்ளுவோமோ?
பாவினால் அழுது நிற்கும்
பாவியாய் ஆகினேனே

மானெனத் துள்ளுவாயே
மயிலென ஆடுவாயே
தேனென இனிய சொல்லை
திகட்டிடா தூற்றுவாயே
கானமே இசைத்து நெஞ்சை
களிப்புறச் செய்குவாயே
நாணென முன்னே வந்து நின்று
நகைமொழி சிந்துவாயே
வீணெனப் போச்சே உந்தன்
வியப்புறு வளங்கள் யாவும்
வானகம் சென்றே எம்மை
வதைத்திட வைத்தாய் தாயே.

வேடிக்கைக் கதைகள் சொல்வாய்
விளையாட்டாய் பொய்கள் சொல்வாய்
நீடிக்கா துனது கோபம்
நின்றிடும் மறு கணமே
சோடிப்பாய் விதம் விதமாய்
சுகம் காண்பாய் கற்பனையில்
வாடிப் போய் விட்டாயம்மா
வதிவிடம் மாறிவிட்டாய்
ஆடிப் போய் விட்டோமம்மா
அன்புடைய உனது இல்லம்
கோடிப்பேர் இருந்தும் என்ன
குலமகள் நீயிங்கின்றி?

நீயெமை விட்டு எங்கோ
நீண்டதோர் தூரம் போனாய்
தாயவள் கொண்ட துன்பம்
தாங்கிடா தேங்குகின்றாள்!
''சேய்'' எனச் சொல்லுவாயே
சின்னவள் தன்னைத் தூக்கி
''ஆய்'' என முத்தம் நூறு
ஆயிரம் நல்குவாயே!
வாயெல்லாம் நோக நோக
வழங்கினாய் அன்பை அள்ளி
ஓய்வது கொண்ட துந்தன்
உதடுகள் விந்தையம்மா!

'ஆசையக்கா பெத்த' தென்று
அன்புடன் நீ முத்தமிட்ட
நேசத் தங்கையவள்
நினை வெங்கே போனதடி?
ஓசைச் சிலம்பு என
ஒலித்த நின் சிரிப்பால்

பாசப் பால் பொழிந்தே
பலமுத்தம் தந்தவளே
மாசு மனத்து இலாய்
மகளே ஜெனி அம்மா!
பூசைக் குரியவளாய்
போனாயே என் செய்வோம்

ஆறு பேர் செல்வம் நீங்கள்
அறு சுவை ஆறுபேரும்
தேறுதல் தருவீர் என்று
தெரிசனம் கண்டு நின்றேன்
'ஆறிலே ஐவர் பெண்கள்'
அடுத்தவர் கேலி செய்தார்
'பேறிது' என்று சொன்னேன்
பெருமைகள் பேசி வென்றேன்
கூறியோர் கூகிநிற்க
குன்றிடாத் தமிழ் எடுத்து
வீறுடன் கவிதை சொல்லி
வியந்திடும் வகையில் வென்றேன்

அரங்கிலே நின்று அப்பன்
அடுக்கியே கவிதை சொல்ல
காம் கொண்டு வாயை மூடி
கல கல வெனச் சிரிப்பாய்
உரம் கொண்ட பெருமையோடு
வழங்கினேன் கவிதை செய்து
உரம் கொண்ட எனது நெஞ்சு
உதிருதே மணலே போலும்
நொறுங்குண்டு கனவு எல்லாம்
நோகுதே இதயம் இன்று
அரங்கொண்டு தேய்த்தல் போலும்
ஆவியைத் தேய்க்குதம்மா.

கருவாக உருவெடுத்து
கையிலொரு குழந்தையாய்
பருவமக ளாய வளர்ந்து
பாவை யொரு குமரியான
உருவாக செழித்துயர்ந்து
உலவிவரும் இளவயதில்
திருவே நீ எமை வ்ட்டு
தேனுலகு போய் விட்டாய்
கருவாக என்னுடைய
கவிப் பொருளாய் ஆனதிலும்
கருவில் நின் தாய்வயிற்றில்
கலைந்திருக்கக் கூடாதா?

ஆவியைப் பிரிந்த கூடாய்
அன்னையள் பரிதவிக்க
சீவியம் முழுவதற்கும்
சிலுவையின் துயரம் தந்து
பாவியர் ஆக்கி எம்மை
பாரிலே சுமக்க வைத்து
கூவிய அலறவைத்து
கூடுவிட் டேகி விட்டாய்
தேவி நீ சென்ற தெங்கே?
தேடியிங் கழுகின்றோமே
புவியினில் வாழ்நாளெல்லாம்
புலம்பிட வைத்த தேனோ?

கொஞ்சுவாய் குழந்தைபோல
குழிவிழச் சிரிக்கும் கன்னம்
நெஞ்சிலே கள்ள மில்லாய்
நித்திலப் பல் ஒளிரும்
வஞ்சகம் இல்லாய் உந்தன்
வார்த்தையோ வெல்லம் வெல்லும்

பிஞ்சிலே உதிர்ந்து எம்மை
பிதற்றிட வைத்த சேயே
வஞ்சியே என்றன் வாழ்வில்
வளர்பிறைப் போழ்திலன்றோ
துஞ்சியே துவண்டு போனாய்
துடித்தெமை தவிக்க வைத்தாய்

தாயிருக்க தாயோடு
தந்தையென நானிருக்க
நீயிருக்க சோதரங்கள்
நின்னோடு சேர்ந்திருக்க
கோயிலுக்கு நிகராய் எம்
குடும்பமே தானிருக்க
காயிருக்க கனியன்றோ
கனிந்து விழும் விதியிருக்க
தீயெரிக்க நெஞ்சுகளை
தீடுமென்று எமைவிட்டு
போயிருக்க வேண்டாமே
பொன்மகளே புலம்புகிறோம்

உடன் பிறந்த அண்ணன்மார்
உனக்கில்லை என்றாலும்
உடன் பிறவா அண்ணன்மார்
ஊர் எல்லாம் உண்டுனக்கு
"கடன் கொண்டார் மனம்" எனும்
கம்பனவன் மொழிபோல
திடனிழந்து விழிகலங்கி
திகைத்து மடல் வரைகின்றார்
இடமெது? நின்முகவரி சொல்
இருப்பது நீ எங்கே சொல்
மடலெழுதி மகளே நின்
மனையதற்கு அனுப்பிவைக்க

''பப்பா'' என அழைத்து
பாசமழை பெய்தவளே
ஒப்புனக்கு இலை மகளே
உயர்ந்தாய் நீ விண்ணோக்கி
தப்பாய் நடந்தனென்றோ
தண்டனையை நீ தந்தாய்
உப்பாய் கரிக்கும் நீர்
உதிர்க்கும் என் விழிபாராய்
எப்போ இனி உந்தன்
இனிய மொழி கேட்பேன்யான்
இப்போ உனை எண்ணி
இரவு பகல் அழுகின்றேன்

பாராட்டி வளர்த்ததற்கோ
பாட்டெழுதிக் கலங்கவிட்டாய்
சீராட்டி வளர்த்ததற்கோ
செய்யுளிலே விம்ம வைத்தாய்
பாலூட்டி வளர்த்தனம்
பதைக்குதடி தினம் எண்ணி
வேலோட்டிச் சென்றாயே
வேதனையால் துடிக்கவிட்டு
கூரீட்டியாய் நுழைந்து
குடையுதடி நெஞ்சமெல்லாம்
ஓரேட்டில் அடங்கிடுமோ
உள்ள துயர் வரைவதற்கு

பங்குனி பதினைந்தில்
பாய்ந்து வந்து என்முகத்தில்
பங்கய இதழ் பதித்து
பிறந்த நாள் வாழ்த்துரைத்தாய்
பங்குனி இருபத்தெட்டில்
பதைத் திடவைத்து எம்மை

எங்கு நீ சென்றாயம்மா
எப்படி நடந்த திஃது
இங்கு நீ வரவேமாட்டாய்
இறுதியிலே உனைத்தேடி
அங்குநான் வரும் போதுன்
அதரத்தைப் பதித்திடடி

உன்னை உணவெடுத்து
உகட்டங்கே கொண்டு செல்ல
உன்முகம் தோன்றுதடி
உண்ணவும் வெறுக்குதடி
வண்ண உடை வாங்கி
வழங்கு கையில் மற்றவர்க்கு
பெண்ணழகே நின்னுருவே
பெற்றவரைக் கலக்குதடி
கண்ணுக்கு எழிலான
காட்சியெனில் நினைவினிலே
முன்னுக்கு நீ நிற்கும்
முகப்பொலிவு வதைக்குதடி

பூவழகு நின் அழகு
புன்னகையோ மின்னழகு
நாவழகாய் பொழிகின்ற
நறுந்தேனுன் மொழியழகு
நீ அழகு நினைத் தினமும்
நினைப்பதுவோ மனத்தழகு
வாஅழகே என்றுன்னை
வாஞ்சையுடன் அழைக்குங்கால்
சாவழகோ சூடினை நீ
சாந்தியுற நின் மனது
கூவியழ வைத் தெம்மை
குஞ்சே நீ பறந்தனையோ.

கொஞ்சம் மொழி எழிலே
குதூகலிக்க எங்கள் மனை
மஞ்சரு எழிலுடனே
மங்கை உனைக் கொடுத்து
பிஞ்சில் பறித் தெடுத்துப்
பிரித்தான் இது கொடுமை
நெஞ்சில் நெருப்பெரிந்து
நெகிழ்ந்து உருகவைத்து
வஞ்சம் செய்திறைவன்
வாரிக் கொண்டதுமேன்
எஞ்சும் வாழ்விலினி
ஏதம்மா மகிழ்வெமக்கு

நாட்டுக் குழைக்க வென
நடந்த வழி நீ தொடர்ந்து
வேட்டுக் கிலக்காகி
வீழ்ந்திருந்தால் மகிழ்ந்திருப்பேன்
கூட்டுக்குள் புகுந்தரவம்
குஞ்சுதனை விழுங்குதல் போல்
வீட்டுக்குள் புகுந்து எமன்
விருந்துக்கு அழைத்தானோ
வாட்டும் நினைவுரைக்க
வார்த்தை வருகுதில்லை
பேட்டுக் குஞ்சம்மா
பெருநிதியே உனைஇழந்தோம்

நீக்க மற நின் நினைவே
நெஞ்சில் நிறைந்நதடி
தூக்கம்வா மறக்குதடி
துயரைப் பெருக்குதடி
நாக்கோ தினமுந்தன்
நாமம் உரைக்குதடி

நோக்கும் திசையாவும்
நின்னுருவைத் தேடுதேடி
தீய்க்கும் நினைவோடு
தினமும் தவிக்கின்றேன்
ஏக்கம் நீங்கும் நாள்
இனிவாழ்வில் எனக்கில்லை

ஆண்டொன்று ஆச்சுதடி
அன்பே நீ பிரிந்து
மாண்டாய் என நினைக்க
மனநோ மறுக்குதடி
வேண்டித் தவமிருந்தும்
வேள்விகள் செய்தாலும்
மீண்டும் வரமாட்டாய்
மேலுகை விட்டிறங்கி
தூண்டிற் புழுவாகித்
துடிக்கின்றேன் மகளே
தூண்டும் நினைவாலே
துயரம் இனி மாறாது...— — ... ...

* * *